# 23.09.2017 அன்று தூத்துக்குடி மாவட்டம், வ.உ.சி கல்லூரியில் மாபெரும் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட அளவிலான மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக, தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்புக்காக பதிவு செய்தவர்கள் / பதிவு செய்யாதவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு சிறப்பு நடவடிக்கையாக தனியார் துறை வேலைவாய்ப்பு சிறப்பு முகாம் வ.உ.சி கல்லூரி, தூத்துக்குடியில் 23.09.2017 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்க உள்ளனர். விருப்பமுள்ள பதிவுதாரர்கள் முகாமில் கலந்து கொள்ளலாம்.

மேலும் இந்த சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெறும் வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் தாமாகவே அரசு அங்கீகாரம் பெற்ற ncs.gov.in என்ற இணையதளத்தில் 18.09.2017க்குள் பதிவு செய்ய வேண்டும் அல்லது அலுவலகத்தில் நேரில் வந்து பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்வதற்கு பதிவுதாரரது வேலைவாய்ப்பு அடையாள அட்டை, குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழ்கள் ஆகியவை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், ஏற்கனவே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஜனவரி 2011 முதல் டிசம்பர் 2015 முடியவுள்ள புதுப்பித்தல் காலக்கெடுவிற்குள் (21.11.2017க்குள்) புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு அரசு அறிவித்துள்ள சிறப்பு சலுகை அடிப்படையில் புதுப்பித்தல் செய்து தரப்படும். முகாமில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைக்கான விண்ணப்பம் வழங்கும் முகாமும் நடைபெற இருக்கிறது. எனவே, மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதுவரை இத்திட்டத்தில் பயன்பெறாதவர்கள் ஆகியோர் அசல் வேலைவாய்ப்பு அடையாள அட்டை மற்றும் தேசிய

மயமாக்கப்பட்ட வங்கியில் வங்கிக்கணக்கு ஆரம்பித்து வங்கிக்கணக்குப்புத்தகம், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் இம்முகாமில் கலந்து கொள்ளலாம். வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வேண்டி விண்ணப்பிக்கும் பதிவுதாரர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கான நேர்காணலுக்கும் பரிந்துரை செய்யப்படும் என்பதால், தகுதியுடைய பதிவுதாரர்கள் தயக்கமின்றி வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்பித்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஆகியவை வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான திறன் பயிற்சி அளித்தல் மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு தொடர்பிலான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. எனவே, விருப்பமுள்ள பதிவுதாரர்கள் திறன் பயிற்சியில் கலந்து கொண்டு பயனடையலாம் என்றும் 23.09.2017 தேதியில் ஏறத்தாழ 100 தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. அதனால் இந்த மாபெரும் சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் எழுதப்படிக்கத் தெரிந்தவர் முதல் முதுநிலை பட்டதாரி B.E., Diploma, ITI படித்தவர்கள் உள்ளிட்ட அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டால் அவர்களின் வேலைவாய்ப்பு பதிவு மூப்பு ரத்து செய்யப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி.